6. கவன ஈர்ப்புகள்.

(அ) உளுந்தூர்ப்பேட்டை மயிலாடும் தாங்கல் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று பேரவையின் 41-ஆவது விதியின்கீழ் ஒன்பது கவன ஈர்ப்புத் தீர்மானங்களுக்கான அறிக்கைகள் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மேசைமீதும் பேரவைத்துறை நூலகத்திலும் வைக்கப்பட்டுள்ளன. பத்திரிகைகளுக்கும் அவை அளிக்கப்படும். எனவே அந்த அறிக்கைகளைப் படித்ததாக அவை ஏற்றுக் கொள்ளும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தேவை என்று கருதினால் ஒரு விளக்கம் கேட்கலாம்.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, " உளுந்தூர் பேட்டை வட்டம், மயிலாடும்தாங்கல் என்ற கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் 1 இலட்சத்திற்கு மேல் நட்டம் ஏற்பட்டதை விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க'' என்ற அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, உளுந்தூர்பேட்டை தாலுகாவில் உள்ள மயிலாடும்தாங்கல் என்ற கிராமத்தில் 29—8—1978 காலை 3.30-க்கு தீ விபத்து ஏற்பட்டு ஜாதி இந்துக்களின் 45 வீடுகள் தீயினால் எரிந்து விட்டன. இத் தீ விபத்தில் உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை. இரண்டு ஆடுகள் மட்டும் மேற்படி தீயில் எரிந்து சாம்பலாகிவிட்டன எனக் கூறப்படுகிறது. இத் தீ விபத்து தகவல் கிராம அதிகாரி மூலம் கிடைத்த உடனேயே உளுந்தூர்ப்பேட்டை தாசில்தார் அவர்கள் அக்கிராமத்திற்கு விரைந்து சென்றார். அதற்குள் திருக்கோயிலூரிலிருந்து அழைக்கப்பட்ட தீயணைப்புப் படையினர் தீயை அணைத்துவிட்டனர். தாசில்தார் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உணவருந்த எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். தாராள குணம் படைத்த தனியார் ஒருவர் நன்கொடை அளித்த 120 லிட்டர் அரிசி பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் வழங்கப்பட்டது. இத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பொருட்சேதம் சுமார் ரூ. 38,000 ஆகக் கணக்கிடப்பட்டுள்ளது. இத் தீ விபத்து இயற்கையாக ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இதில் ஏதோ சதி இருப்பதாகக் கருதப்பட்டு திருக்கோயிலூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அது விசாரணையில் இருந்து வருகிறது. பாதிக்கப்பட்ட 45 பேர்களுக்கு தலா ரூ. 100 வீதம் நிவாரணம் அளிக்க ரூ. 4,500 வழங்க அரசுக்கு ஒரு செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து 12—9—1978 அன்று கிடைக்கப்பெற்று, அதனை அனுமதிக்கும் அரசு ஆணையும் அன்று வெளியிடப்பட்டது.